நூல்—அஞ்சல்
BOOK-POST

திருவள்ளுவர் ஆண்டு 2039

செந்தமிழ்

திங்கள் இதழ்

தொகுதி :102 பகுதி :4 ஏப்ரல்-08

மதுரைத் தமிழ்ச்சங்கம் 14-09-1901 THE MADURAI TAMIL SANGAM

மதுரைத் தமிழ்ச்சங்க வெளியீடு

செந்தமிழ்க் கல்லூரி முப்பெரும் விழா

15.4.2008 அன்று மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் செந்தமிழ்க் கல்லூரி 51ஆவது ஆண்டுவிழா சிறப்பாக நடைபெற்றது. கல்லூரிக்கல்வி இணை இயக்குநர் முனைவர். வை. சுவாமிநாதன் அவர்கள் விழாவில் கலந்து மாணவர்களை வாழ்த்திப் பேசினார். மாணவர்கள் தன்னம்பிக்கையுடனும் விடாமுயற்சியுடனும் செயல்பட்டால் வாழ்வில் வெற்றி பெறலாம்; இந்தியாவிலேயே சிறப்பு பெறலாம் என்று தன் சிறப்புரையில் குறிப்பிட்டார். தமிழ் வளர்ச்சித் துறை உதவி இயக்குநர் முனைவர். க. பசும்பொன் அவர்கள் கலந்துகொண்டு, தமிழ் மாணவர்கள் தமிழ் செவ்வியல் மொழியாக ஆகியிருக்கும் தருணத்தில் சிறப்புறவாழ வாய்ப்புகள் பல உண்டு என்று குறிப்பிட்டார்.

செந்தமிழ்க் கல்லூரி கல்விக்குத் தலைவர் மனிதநேய மருத்துவர் ந.சேதுராமன் அவர்கள் வரும் கல்வியாண்டில் மாணவர்களுக்குச் சிறந்த குளிரூட்டப்பட்ட கருத்தரங்கக் கூடம் தயாராகிக் கொண்டிருக்கிறது என்றும் அதற்குத் தேவையான உதவிகளைச் செய்வேன் என்றும் வாக்குறுதி வழங்கியதோடு, பார்வையற்ற மாணவர் கா.சரவணபாண்டி (III பி.லிட்) பார்வை பெறுவதற்கான முழுச்செலவையும் தானே ஏற்றுக் கொள்வதாக வாக்குறுதி வழங்கி, சிறப்புரையாற்றினார்.

கல்லூரிச் செயலாளர் திருமிகு. இரா குருசாமி அவர்கள் வரவேற்புரை ஆற்றினார். வரவேற்புரை நல்கும்போது, எங்கள் கல்லூரி நிர்வாகம் தெளிந்த நீரோடை போலவும் கண்ணாடி அறையைப் போன்றும் திறந்த புத்தகமாக விளங்குவதில் பெருமையடைகிறோம் என்று குறிப்பிட்டார்.

கல்லூரி முதல்வர் முனைவர் க. சின்னப்பா அவர்கள் மற்ற கல்லூரிகள் வியக்கும் வண்ணம் ஆற்றல் நிறைந்த ஆண்டறிக்கையை வாசித்தளித்தார்.

மதுரைத் தமிழ்ச்சங்கச் செயலாளர் திருமிகு இரா.அழகுமலை எம்.ஏ., எம்.பில் அவர்கள் அனைவருக்கும் நன்றி வழங்க, கலை, இலக்கிய, விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்கள் பரிசுகள் மற்றும் கல்வி உதவித்தொகைகள் பெற்று மகிழ்வுடன் சென்றனர்.

செந்தமிழ்

(தோற்றம் 1902)

தொகுதி : 102
பகுதி : 4
ஏப்ரல் 2008

திங்கள் இதழ்
திருவள்ளுவர் ஆண்டு 2038

வள்ளல் பாண்டித்துரைத்தேவர்
21.03.1867 - 02.12.1911

மதுரைத் தமிழ்ச்சங்கம் 14-09-1901 THE MADURAI TAMIL SANGAM

இதழ்க் கட்டணம்	உள்நாடு	வெளிநாடு
ஆண்டுக் கட்டணம்	ரூ. 100	ரூ. 600
புரவலர் கட்டணம்	ரூ. 1000	ரூ. 2000
தனி இதழ்க் கட்டணம்	ரூ. 10	

ஆசிரியர் இரா. அழகுமலை எம்.ஏ., எம்.ஃபில்.,
செயலாளர்,
மதுரைத் தமிழ்ச்சங்கம்,
மதுரை.

பொருளடக்கம்

8.

இதழ்மணம் 128

நூல் மதிப்புரை — இரா. அழகுமலை, எம்.ஏ., எம்.ஃபில்., 129

நூல் மதிப்புரை — இணைப்பேராசிரியை வீ. காந்திமதி 131

ஐங்குறுநூற்றில் சொற்றொடர் அமைப்பு 136
முனைவர் இரா. சுதமதி

பாரதியாரும் மொழி உணர்வும் 147
முனைவர் இரா. செல்வக் கணபதி

தமிழ் இலக்கண நூல்களில்
அறிவியல் சிந்தனைகள் 156
முனைவர் பெ. சுயம்பு

இதழ்மணம்

ஒரு நூலைப் படிப்பதற்குரிய நுழைவாயிலாக விளங்குவது நூல் மதிப்புரை. தமிழ்ச்சங்கச் செயலாளர் திருமிகு *இரா. அழகுமலை* அவர்கள், செந்தமிழ்க் கல்லூரியின் இணைப் பேராசிரியர் முனைவர். வீ. *காந்திமதி* ஆகிய இருவரது நூல்மதிப்புரைகள், 1. *முறைசை மகிமை*, 2. *இளைய தலைமுறை எழுக! உயர்க!*, 3. இராம காவியம் *கதாபாத்திரங்கள் காட்டும் நெறி* ஆகிய *நூல்களின்* உள்ளடக்கத்தையும், உட்பொருளையும் அறியத் துணை செய்கின்றன.

“செம்மொழித் தகுதிவாய்ந்த மொழி நந்தமிழ் மொழி என்பதனை, கோவிந்தம்மாள் ஆதித்தனார் கல்லூரியின் தமிழ்த் துறைத் தலைவர் முனைவர் *இரா. சுதமதி* அவர்கள் ஐங்குறுநூற்றுப் பாடல்களில் உள்ள சொற்றொடர் அமைப்புகளைச் சான்று காட்டி விளக்கியுள்ளார்.

பாட்டுக்கொரு புலவன் பாரதியின் உள்ளத்தில் உதித்த எழுச்சி மிக்க தேசியமும், தெய்வீகமும் எத்தகையன என்பதை எடுத்துரைத்த முனைவர். இரா. *செல்வக் கணபதி* அவர்கள், பாரதி செலுத்திய தமிழ்மொழித் தேரைச் செலுத்தவிடாமல் முட்டுக்கட்டைகள் இட்டுத் தடுக்கின்ற இன்றைய தமிழ்ச் சமூகம் குறித்துத் தமது ஆழ்ந்த வேதனையையும் வெளிப்படுத்துகிறார்.

தமிழில் தோன்றிய இலக்கண நூல்களான தொல்காப்பியம், வீரசோழியம், நன்னூல், தொன்னூல் விளக்கம் ஆகியவற்றில் புலப்படும் அறிவியல் சிந்தனைகளை ஆதித்தனார் கல்லூரியின் இணைப் பேராசிரியர் *முனைவர். பெ. சுயம்பு* அவர்கள் ஆய்வுரையாக அளித்திருக்கிறார்.

இனிமையும் நீர்மையும் நிறைந்த தமிழ்மொழி இலக்கிய, இலக்கண நூல்களின் ஆய்வுரைகளைத் தாங்கி வரும் செந்தமிழ் இதழ் நாளும், நாளும் தமிழுக்கு செய்துவருகிறது நல்ல தொண்டு என்பதற்கு இவ்விதழும் சான்றாகிறது.

நூல் மதிப்புரை

இரா. அழகுமலை, எம்.ஏ., எம்.ஃபில்.,
செயலாளர்,
மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை.

நூல் : **முறசை மகிமை**
ஆசிரியர் : முறசை சுந்தரேச சிவம்
வெளியீடு : முறையூர் கிராமத்தார்கள்

முறசை சுந்தரேச சிவம் அவர்கள் பாடிய "முறசை மகிமை" என்னும் முறையூர்த் திருத்தலத்தின் பெருமை பற்றிய செய்திகளை ஒரு நூலாகத் தொகுத்துள்ளார்.

இந்நூலின் அட்டைப் படத்தில் ஒரு புறம் தாமரை மலர் மீது திருநீறும், மறுபுறம் எலுமிச்சம் பழமும் இருப்பதனைப் பார்க்கலாம். வித்தியாசமான சிந்தனைக்கு இந்நூல் கொண்டு வருகிறது. எளியவர்கள் முதல் சான்றோர் வரை படித்துப் பொருள் உணர்வதாக அமைந்தவிதம் மிக அருமையாக உள்ளது.

தத்துவங்களைப் பற்றிய செய்திகளைச் சொல்லும் போது 6x6=36 என்ற தத்துவங்களைக் கையாண்ட முறையும் மிக அருமையாயிருக்கிறது. ஒரு பாடலில்,

"தண்புனலும் வெண்மதியுஞ் சுமந்தாய் போற்றி
தத்துவங்கள் ஆறாறுங் கடந்தாய் போற்றி"

என்ற வரிகளில் ஆத்ம தத்துவம் 24. வித்யாதத்வம் 7. சிவதத்துவம் 5 எனத் தத்துவங்கள் 36 என்ற செய்தியைச் சொல்லுகின்ற முறசை சுந்தரேச சிவனின் பக்திப் பரவசத்தைப் பாராட்டலாம்.

"மின்னலொடு மேகமெனப் பொலிந்தாய் போற்றி
மன்னனென மாமதுரை அமர்ந்தாய் போற்றி"

என்ற பாடலின் மூலம் மின்னலோடு கூடிய மழை மேகம் போலச் சொக்கரும், மீனாட்சியும் நன்றாய்க் கலந்த நிலையைச் சொல்லும் போது ஒப்பிடுத் திறனையும் பெற்றவர் இந்நூலாசிரியர் எனத்

தெரிகிறது. "துன்புற்ற அனுபவமே தூணாகும் வாழ்வினுக்கே" என்ற பாடல் வரிகள் வாழ்க்கை என்கின்ற கட்டிடம் நிலைத்து நிற்க, துன்பம் என்ற அனுபவங்களே தூண்கள் என்ற அரிய சிந்தனையை அனைவரும் ஏற்றுக் கொள்ளும் தன்மையை வெளிப்படுத்துகிறார்.

"சன்னதி மருதடி சரணடைந் தோர்க்கெலாம்
நன்நீதி நன்மதி நற்கதி இவையொடு
பன்நதி ஆடிய பலனும் நல்குவாய்
வெண்மதி மிளிர்ச்சடை விமல அண்ணலே"

என்ற பாடல் வரிகளின் மூலம் பலநதிகளில் நீராடிய பலனை உன் சன்னதியில் பெற்றேன் என்ற கருத்தையும் சிந்திக்க வைக்கின்றது.

பழமை வாய்ந்த திருத்தலத்தைப் பற்றிய செய்திகளைக் கோர்வையாக்கிக் கொடுத்தும், திருப்பணிகளைச் செவ்வனே செய்தும் கொண்டிருக்கக் கூடிய நூலாசிரியரை வாழ்த்தலாம்.

2008 ஏப்ரல் மாதம் புரவலர் கட்டணம் வழங்கிய பெருமக்கள்

1. **எஸ். முகைதீன் பிச்சை,**
   தமிழாசிரியர், மசூதுதைக்கா மேல்நிலைப் பள்ளி, கடையநல்லூர்
2. **டாக்டர் கு. கதிரேசன்,**
   முதுமாத்தன்மொழி (அ) இடையன்குடி வழி, தி.வேலி (மா)
3. **முதல்வர், அரசு ஆடவர் கலைக் கல்லூரி,**
   கிருஷ்ணகிரி.

மைசூர் இந்திய மொழிகள் நடுவண் நிறுவனம்
நல்கை நிதி – ரூ10,000/-

நூல் மதிப்புரை

வீ. காந்திமதி,
இணைப்பேராசிரியர்,
செந்தமிழ்க் கல்லூரி, மதுரை–1.

நூல் : **இளைய தலைமுறை எழுக! உயர்க!**
குலோத்துங்கன் கவிதைகள்-மாணவர் பதிப்பு

ஆசிரியர் : **பேராசிரியர். வ.சே. குழந்தைசாமி**

மதுரை காமராசர் பல்கலைக்கழகம் (1978–79), அண்ணா பல்கலைக்கழகம் (1981–90), இந்திராகாந்தி திறந்த நிலைப் பல்கலைக் கழகம் (1990–94) ஆகிய பல்கலைக்கழகங்களில் துணைவேந்தராகப் பணியாற்றிக் கல்வித் துறைக்குப் பெருமை சேர்த்த பேராசிரியர் வ.சே. குழந்தைசாமி அவர்களை நாடும், உலகமும் நன்கறியும். அப்பெருந்தகையார், குலோத்துங்கன் என்ற புனைப்பெயரில் படைத்துப் பல்வேறு இதழ்களில் வெளியிட்ட எழுச்சிக் கவிதைகளைத் தொகுத்து, திரு. இரா. மோகன்குமார் அவர்கள் நூலாக வெளியிட்டிருக்கிறார். இத்தொகுப்பு நூலில் 15 தலைப்புகளில் 94 கவிதைகள் இடம் பெற்றிருக்கின்றன.

மானுட சக்தியின் வீரியத்தை, புதுயுகத்தின் மலர்ச்சியை, வையக வாழ்வின் வசந்தத்தை, மலைமுகட்டினை எட்டித்தொட முனையும் முயற்சியை, தணியாத தாகமான முன்னேற்றத்தை, காலமெனும் தூரத்தைத் தாண்டிட முற்படும் விழைவினை, ஏழ்மையையும் இனிதாகப் பார்க்கும் எண்ணத்தை, வறுமையை வெல்லத் துடிக்கும் மானுட சீற்றத்தை, சாதித் தீயின் வெம்மையை வென்று பொசுக்கிடத் தூண்டும் சாதனையை, தமிழச்சாதியின் எழுச்சியை, பெண்மையின் பெருந்தகுதியை, ஆணும் பெண்ணும் இணைந்த உலகத்தை, பெண்ணுக்கு நிலவும் கொடுமையை, ஏழைகளின் கண்ணீரை, சுயநலத்தின் தாண்டவத்தை ஆகிய

இவற்றைத் தம் கவிதைகளின் கருப் பொருளாக்கிச் சொல்லோவியத்தால் நற்கவிதைகளைப் படைத்துத் தந்த பெருமைக்குரியவராய்க் கவிஞர் குலோத்துங்கன் திகழ்கிறார். ஆதலால் இத்தகு சீர்மிகு கவிதைகளை எல்லாம் சேர்த்துத் தொகுத்து "இளைய தலைமுறை எழுக! உயர்க!" எனத் தலைப்பிட்டு நூலாக ஆக்கியிருக்கிறார் திரு. இரா. மோகன் குமார் அவர்கள். சிந்தனையைச் சீர்படுத்தும் இக்கவிதைப் பொற்குவியலிலிருந்து ஒருசில மணிகள் இங்கே:

"வெங்கனலில் குளித்தோம்
எமை ஒரு வெயில் சுடுமோடா"

இளமையின் ஆற்றல் கனலில் குளித்த தணலாக வெளிப்படுகிறது.

குஞ்சுகளின் கோரிக்கையாக,

"எங்களுக்கு நீங்கள்
இறக்கையைக் கொடுங்கள்
.. வானத்தில்
இடம் இருக்கும் உயரம் வரை
நாங்கள் எழும்புவோம்"

என்றமைந்த இப்பாடல், இளைஞர்களின் ஆக்கப்பாதையைக் காட்டுகிறது. தன்னை உணர்தலே தனிப்பேரின்பம் என்பதனை,

"ஊடுருவி உள் நுழைந்து
உண்மை யெனும் உன்னதத்தைக்
காணுவதை ஒத்த களிப்பில்லை"

என்ற கவிதை உணர்த்துகிறது.

"வேதியர் சாதியை விடுப்பினும் அரசியல்
வாதியர் சாதியை வரமெனத் தாங்குவர்'

சாதியம் இல்லா அரசியல் தான் இங்கு இல்லை என்னும் எதார்த்தம் வெளிப்படுவதைக் காணலாம்.

"பெண்மை எனப்படும் காவியம்
புவி பேணும் வலிமையின் பெட்டகம்"

இவ்வரிகள் பெண்மையைப் போற்றுகின்றன.

"மனிதச் சாதியின் வாழ்வின் மிஞ்சிய புனிதம்
ஒன்றிலை, இதைப் புவியிசை நாட்டுவோம்"

மனித வாழ்வு மனிதனால் தான் உயர்வுறும். மனிதனை மிஞ்சிய புனிதம் வேறொன்றுமில்லை என்பதைப் புவிமிசை நாட்டிட மனிதனை அழைக்கும் மாமனிதரை இக்கவிதைகள் கண்முன் நிறுத்துகின்றன.

மனிதத்தை வளர்க்கும் கல்வியால் உயர்ந்த உத்தமர், கவிஞர் குலோத்துங்கன். அந்தக் கல்வியெனும் வான்பொருள் உலக மானுடத்தை வளர்க்க வேண்டுமென்று விரும்புகிற அவரது அளவிடற்கரிய ஆர்வம் இந்நூற் கவிதைகளினிடையே உயிரோட்டமாக ஊடுருவிச் செல்கிறது.

கவிஞர் குலோத்துங்கனின் கவிதைகள் அனைத்தும் எண்ணச் சிதறல்கள் அல்ல! சிந்தித்துச் செதுக்கிய சிற்பங்கள்! பள்ளம் நோக்கிய பனிநீராக, தெளிந்த நீரோடையாக கவிஞரின் கவிதைஓட்டம் தங்குதடையின்றிச் கலகலத்து ஓடிவருவதை அத்தனை கவிதைகளிலும் காணலாம்.

படிக்கின்ற மாணவர் அனைவரும், குலோத்துங்கன் கவிதைகளைப் படித்து, உணர்ந்து, மகிழ்ந்து, சிறந்து, நாளைய உலகத்தைப் படைக்கும் புத்தொளி தீபங்களாக ஒளிர வேண்டும் என்ற நம்பிக்கையை ஊட்டும் விதமாக இந்நூலைத் தொகுத்த இரா. மோகன் குமார் அவர்களின் முயற்சியைப் பாராட்டியே ஆகவேண்டும்!!

இராமகாவியம் கதாபாத்திரங்கள் காட்டும் நெறி

வணிகவியல் ஆசிரியரான திரு.இரா. மோகன்குமார் அவர்கள் தமிழ்மொழி இலக்கியங்களிடத்தில் தீராத பற்றுடையவர் என்பதை, **'இராமகாவியம் கதாபாத்திரங்கள் காட்டும் நெறி'** என்ற அவரது படைப்பின் வழி அறியலாம்.

'இலக்கியங்கள் காலம் காட்டும் கண்ணாடி' மட்டுமன்று, ஒவ்வொரு காலத்திலும் மக்கள் பின்பற்றி வாழ்வதற்குரிய வழிகாட்டியாகவும் விளங்குவன. கம்பர் படைத்த கதைமாந்தர்களின் பண்புகள் இக்காலச் சமுதாயத்திற்கு எவ்வகையில் நல்வழி காட்டுகின்றன என்பதை இன்றைய சூழலுக்கு ஏற்றவாறு இந்நூலை ஆக்கியுள்ளார் திரு. மோகன்குமார். இராமாயணப் பாத்திரங்களின் பண்புகளைச் சுருக்கமாகவும், தெளிவாகவும் எடுத்துரைத்ததுடன், கதை நிகழ்வுகளின் பின்னிலையை உணர்த்தி இருப்பது சிறப்புடைத்து.

இராவணன் : எப்போதும் திருந்தலாம் திருந்துவதற்கு எப்போதும் காலம் கடந்துவிடாது.

இந்திரஜித் : நடத்தையே மனிதனுக்கு உரைகல்.

கும்பகர்ணன் : வீரனுக்கு மரணம் ஒருமுறைதான் வரும்.

மந்தரை : தன் நோக்கம் நிறைவேறப் பேயும் கூட சாத்திரம் பேசும்.

சூர்ப்பனகை : காமத்திற்கு அடிமையாதல் தன் அழிவுக்கு அடித்தளம் அமைத்தல்

அகலிகை : பெண்ணின் சபலத்திற்குக் கிடைத்த தண்டனை.

கைகேயி : மனைவியாக இருந்தாலும் அளவுக்கதிகமாக அவளை நம்புவது அழிவுக்குக் காரணமாக அமையும்.

சுக்கிரீவன் : நடத்தையே மனிதம்

வாலி : சமயோசித புத்தி இல்லாமையால் வரும் கேடு.

குகன் : நிழல் தரும் மரமான நட்பு.

அனுமன் : அனுமன்கள் உள்ளதாலேயே இன்றும் இராமர்கள் வெற்றி கொள்கிறார்கள்.

விபீடணன் : என்னவிலை கொடுத்தாயினும் சமாதானத்தை வாங்கு.

சுபத்திரை : புயல் வீசும்போது கலங்கரை விளக்கம்போல் போர்க்களத்தில் தளபதியாய்

பரதன் : ஒவ்வொருவரும் பரதனானால் நீதிமன்றங்களில் எல்லா நாட்களும் ஞாயிற்றுக்கிழமையாய் ஆகும்.

சுமந்தனன் : நல்ல வேலையாள் பிறப்பதில்லை. உருவாக்கப்படுகிறான்.

சீதை : பெண்கள் ஆணுக்குத் துன்பம் கொடுப்பது இன்றும் நீங்காதது.

இராம இலக்குமணர் : இராமன் உயிர் என்றால் இலக்குவன் உடல்.

தசரதன் : மனைவிக்கு வரம் கொடுத்த தயாளகுணத்தால் மரணம் வந்தெய்தது.

இவ்வாறு ஒவ்வொரு கதாபாத்திரத்திற்கும் உரிய முத்தாய்ப்பான பண்பினைச் சுட்டுவதனைப் பார்க்க முடிகிறது. நூலாசிரியர், அகலிகையைச் சபலத்துக்குரியவளாகவும், கைகேயியை அழிவுக்குரியவளாகவும் காட்டியிருப்பது நெருடலாக உள்ளது. ஓர் அவதாரச் செம்மலாக இருந்தபோதும், இராமனது குறைநிறைகளை ஆராய்ந்துரைத்ததும், பரதன், கும்பகர்ணன், இந்திரஜித் ஆகியோரது உள்ளார்ந்த உணர்வுகளை வடித்திருப்பதும் நூலாசிரியரது ஆய்வுத் திறனைப் பறைசாற்றுகின்றன.

இராமாயண மாந்தர்கள் காவியத்தில் மட்டும் வலம் வருபவர்கள் அல்லர்! ஒவ்வொரு காலகட்டத்திலும் வாழ்ந்து கொண்டிருப்பவர்கள். மானுட சமூகத்தின் வாழ்க்கைப் பயணத்தில் **'இராமாயண காவியம் கதாபாத்திரங்கள் காட்டும் நெறி'** என்னும் இந்நூல் வழிகாட்டி மரமாக மட்டும் அல்லாமல், வாழ்க்கைத் துணையாக விளங்குகிறது என்பது முற்றிலும் உண்மை.

ஐங்குறுநூற்றில் சொற்றொடர் அமைப்பு

முனைவர் இரா. சுதமதி,
தமிழ்த்துறைத் தலைவர், கோவிந்தம்மாள் ஆதித்தனார்
மகளிர் கல்லூரி, திருச்செந்தூர் – 628 215.

முன்னுரை

பழங்காலம் தொட்டு இன்றுவரை உயிரோட்டத்துடன் விளங்குவது தமிழ்மொழியே. வேறு மொழியின் துணையின்றி தனித்தே இயங்கவல்ல – இயக்கவல்ல மொழி தமிழே ஆகும். இதன் இலக்கணச் செழுமையே இம்மொழியை உயர்தனிச் செம்மொழியின் நிலைக்கு உயர்த்தியது எனலாம். பழமை வாய்ந்த சங்க இலக்கியங்களில் விரவிக் கிடக்கும் சொல்லமைப்பும் தொடரமைப்பும் பொருளமைப்பும் தமிழின் செம்மொழித் தன்மைக்குச் சான்றுகள். அவ்வகையில் எட்டுத் தொகையுள் ஒன்றாகிய ஐங்குறுநூற்றின் தொடரமைப்பை இக்கட்டுரை ஆராய முற்படுகிறது.

சொற்றொடர் அமைப்பு

சொற்கள் தொடர்ந்து அமையும் அமைப்பைச் சொற்றொடர் என்பர். காலப்போக்கில், சொற்கள் மாற்றமடைகையில் சொற்பொருளும் மாற்றத்துக்கு உட்படுவதைக் காணலாம். சொற்றொடரமைப்பே ஒரு மொழியின் தனிச் சிறப்பைக் காட்ட வல்லதாகும். தொடரமைப்பை ஆராயும் இலக்கணக் கோட்பாடுகள் மாற்றிலக்கணக் கோட்பாடுகள் எனப்படும்.

பழந்தமிழ் இலக்கியங்களான எட்டுத்தொகை, பத்துப்பாட்டு போன்றவற்றில் தமிழின் சொற்றொடர் அமைப்பை ஆராய முற்படுவது தமிழின் சிறப்பை, அமைப்பை அறியத் துணை நிற்கும் முயற்சியாகும். குறுகிய தொடரமைப்புகளோடு காணப்படும் குறுந்தொகை, ஐங்குறுநூறு போன்றவை தமிழின் தொடரியலை அறியத் தகுந்த சான்றுகளாக விளங்குகின்றன. இவற்றுள் ஐங்குறுநூறு இங்கு ஆய்வுக்கு உட்படுத்தப்படுகிறது.

தொடரமைப்பு வகைகள்

டாக்டர் சு. சக்திவேல், டாக்டர்.பெ. சுயம்பு ஆகியோர் முறையே தமிழ்மொழி வரலாறு, தமிழ்மொழி அமைப்பும் வரலாறும் ஆகிய நூல்களில் சொற்றொடர்களைப் பின்வருமாறு பகுக்கின்றனர்.

1. பெயர்த் தொடர்கள்
2. வினைத் தொடர்கள்
3. தனித் தொடர்கள்
4. கூட்டுத் தொடர்கள்
5. கலவைத் தொடர்கள்

இவ்வமைப்பு முறைகள் ஐங்குறுநூற்று அடிகளில் பயின்று வருவதைக் காணலாம்.

1. பெயர்த் தொடர்கள்

பெயர்த் தொடர்கள் ஒரு பெயர்ச் சொல்லைத் தலைமைச் சொல்லாகக் கொண்டு அமைகின்றன. பெயரடைகளும் பெயரெச்சங்களும் பெயர்ச் சொற்களுக்கு விளக்கச் சொற்களாகின்றன என்று பெயர்த் தொடர்களுக்கு விளக்கம் தருகிறார் பெ. சுயம்பு. இத்தகைய பெயர்த் தொடர்கள் ஐங்குறுநூற்றில் ஏராளமாய்க் காணக்கிடக்கின்றன.

புணரி திளைக்கும் துறைவன் (150)

கலிழ்ந்த கண்ணள் (259)

உள்ளுதொறும் கலிழும் நெஞ்சம் (445)

இவை பெயரெச்சத் தொடர்கள்

மட நடை நாரை (160)

சிறு வெண் காக்கை (161)

பூந்தார் மார்ப (362)

பல் இருங் கூந்தல் (429)

இவை பெயரடைத் தொடர்கள்

எழுவாயும் பயனிலையுமாகப் பெயர்த் தொடரே அமையின், அவ்வகைத் தொடர் சமநிலைத் தொடர் எனப்படும்.

சுரும்பு பசிகளையும் பெரும்புனல் ஊரன் (65)

புதல்வற் கவைஇயினன் தந்தை (409)

பூ அணி கொண்டன்றால் புறவே (412)

இவற்றோடு நீண்ட பெயர்த் தொடர்களும் ஐங்குறு நூற்றுப் பாடல்களில் நிறைந்து காணப்படுகின்றன.

அம்சில் ஓதி அசைநடைப் பாண்மகள் (49)

அலங்கு இதழ் நெய்தல் கொற்கை முன்துறை (185)

வண்டு இமிர் சுடர் நுதல் குறுமகள் (254)

பெயர்த் தொடர்கள் ஐங்குறுநூற்றின் கற்பனை வளத்துக்கும் உணர்ச்சி வெளிப்பாட்டுக்கும் சான்றாக அமைந்துள்ளமையை அறிய முடிகிறது.

2. வினைத் தொடர்கள்

வினை முற்றைத் தலைமைச் சொல்லாகக் கொண்டவை வினைத் தொடர்கள். பெயர்த் தொடர்களைப் போலவே வினையெச்சங்களும் வினையடைகளும் வினைமுற்றுக்கு விளக்கச் சொற்களாக வருவதை ஐங்குறுநூற்றுத் தொடரமைப்புகளில் காண முடிகிறது.

உண்கண் சிவப்ப, அழுது நின்றோளே (69)

நெய்தல் மயக்கி வந்தன்று (101)

இன்புற இசைக்கும் (102)

விட்டுச் சென்றனர் (340)

இவை வினையெச்சத் தொடர்கள். வினையெச்சங்களும் வினையடைகளும் அடுக்கி வரும் தொடர்களும் காணப்படுகின்றன.

நல்ல சொல்லி மணந்து இனி
நீயேன் என்றது எவன்கொல்? (22)

பூக்கெழு குன்றம் நோக்கி நின்று
மணி புரை வயங்கு இழை நிலைபெறத்
தணிதற்கும் உரித்து, அவள் உற்ற நோயே (210)

நல் நுதல் நாறும் முல்லை மலர
நின்னே போல மா மருண்டு நோக்க
நின்னே உள்ளி வந்தனென் (492)

இவற்றோடு ஐங்குறுநூற்றுப் பாடல்களின் தொடரமைப்பில் பல துணைவினைகள் அமைந்திருப்பதையும் காணமுடிகிறது.

எய்தினன் ஆகின்று கொல்லோ? (24)

வளர்ந்தீ சினாங்கு (44)

ஒழிதல் செல்லாது ஒண்டொடி குணனே (321)

பூ அணி கொண்டன்றால் புறவே (412)

விரையாதீமே (364)

இருள் பொர நின்ற இரவினானே (362)

இத்துணைவினைகள் வினைச் சொல்லைச் சார்ந்து வினைத்தொடரின் பொருளுக்கு மேலும் மெருகூட்டுகின்றன.

சங்க இலக்கியங்களில் வினைமுற்றுக்கள் எச்சமாகப் பயன்படுத்தப்படும் புதிய சொற்பயன்பாட்டினை பெ. சுயம்பு தம் தமிழ்மொழி அமைப்பும் வரலாறும் நூலில் குறிப்பிடுகிறார். அவ்வாறே ஐங்குறுநூற்றிலும் எச்சங்கள் முற்றாக இடம்பெற்றுள்ள புதிய பயன்பாட்டினைக் காணமுடிகிறது.

பிரிந்தனன் அல்லனோ? பிரியலென் என்றே (18)

தீ உறு மெழுகின் நெகிழ்வனர் விரைந்தே (32)

வந்தனெம் மடந்தை! நின் ஏர் தர விரைந்தே (491)

இத்தகைய வினைத்தொடர் அமைப்புகள் தமிழ்மொழி பெற்ற வளர்ச்சி நிலைக்குச் சான்றுகளாகும்.

3. தனித் தொடர்கள்

தனித்தொடர்கள் பொருள் அடிப்படையில் அமைகின்றன. இவை செய்தித் தொடர், ஏவல் தொடர், வினாத் தொடர், வியங்கோள் தொடர், உணர்வுத் தொடர், செய்வினைத் தொடர், செயப்பாட்டு வினைத் தொடர் எனப் பலவகைப்படும்.

3.1 செய்தித் தொடர்

செய்தித் தொடர்களை உடன்பாட்டுத் தொடர், எதிர்மறைத் தொடர் என இரண்டாகப் பிரிக்கலாம்.

அரும்பொருள் செய்வினை தப்பற்கும் உரித்தே (302)

அன்னையும் அருந்துயர் உழந்தனள் (242)

இவை உடன்பாட்டுத் தொடர்கள்

உடலினென் அல்லேன் (66)

அறியேம் அல்லேம் (240)

மறந்து அமைகல்லாது என் மடம் கெழு நெஞ்சே (457)

இவை எதிர்மறைத் தொடர்கள். ஐங்குறுநூற்றில் எதிர்மறைத் தொடர்களே மிகுதியாகக் காணப்படுகின்றன. உடன்பாட்டு முற்றுக்களுடன் 'அல்' அடியாகப் பிறந்த முற்றுக்கள் இணைந்து எதிர்மறைத் தொடர்கள் காணப்படுகின்றன.

3.2 ஏவல் தொடர்

கட்டளை இடும் ஏவல் வினை முற்றுக்களைக் கொண்டு இத்தொடர் அமையும். ஐங்குறுநூற்றில் இவ்வேவல் தொடர்கள் இயற்கை ஏவல், முன்னிலை ஏவல், எதிர்மறை ஏவல் என அமைகின்றன.

அன்னாய்! வேண்டு அன்னை! (101)

இது வினைப்பகுதியே ஏவலாக அமைந்த இயற்கை ஏவல் தொடர்.

உரைமதி நீயே *(478)*

அறிந்தனை ஒழுகுமதி *(44)*

கடவுமதி பாக! *(483)*

ஊர்மதி வலவ! *(486)*

'**அதி**' என்ற அசைச்சொல்லை விகுதியாகப் பெற்ற இத்தகைய ஏவல் தொடர்கள் ஐங்குறுநூற்றில் பரந்து காணப்படுகின்றன.

கைவல் பாண! எம் மறவாதீமே *(473)*

செல்லாதீமோ என்றனள் யாயே *(186)*

இவை எதிர்மறை ஏவல் தொடர்கள். '**ஈம்**' என்ற துணைவினைச் சொல்லைப் பெற்று வருகின்ற இத்தகைய தொடர்கள் பலவற்றை ஐங்குறுநூற்றில் காணமுடிகிறது.

3.3. வினாத்தொடர்

ஐங்குறுநூற்றுப் பாடல்கள் பல வினாப் பொருளில் அமைந்துள்ளன. நூற்றுக்கு மேற்பட்ட பாடல்கள் வினாப் பொருளைக் கொண்டு திகழ்கின்றன. யார், எவன் போன்ற வினாச் சொற்களையும் ஆ, ஓ, எ, கொல் ஆகிய வினா இடைச் சொற்களையும் இவை பெற்று வந்துள்ளன. இவ்வினாத் தொடர்களை வினா அடி, வினா இடைச்சொல் ஏற்ற தொடர்கள், வினாப் பதிலீட்டுத் தொடர்கள் எனப் பகுக்கலாம்.

யார் நலம் சிதையப் பொய்க்குமோ இனியே? (48)

எவ்வூர் நின்றன்று மகிழ்ந! நின் தேயே? *(62)*

என் பயம் செய்யுமோ? *(244)*

இவை வினா அடித் தொடர்கள்

அறியுமோதில்ல? *(241)*

மகிழ்நன் மாண்குணம் வண்டு கொண்டன கொல்? (90)

இவை வினா இடைச்சொல் தொடர்கள்.

உண்கண் பசப்பது எவன்கொல்? (21)

யான் எவன் செய்கோ? (133)

இவை வினாப் பதிலீட்டுத் தொடர்கள்.

வினாத் தொடர்கள் கற்போரின் மனத்தில் உணர்வுகளை எழுப்ப வல்லன. அகப்பொருள் சார்ந்த இவ்வினாத் தொடர்கள் அகமாந்தர்களின் அன்பின் ஆழத்தை வெளிப்படுத்தும் தன்மையனவாய் ஐங்குறுநூறு எங்கும் விரவிக் காணப்படுகின்றன.

3.4. வியங்கோள் தொடர்

ஐங்குறுநூற்றின் தொடரமைப்புகளில் சிறப்புற்று விளங்குவது வியங்கோள் தொடரே ஆகும். ஐங்குறுநூற்றுப் பாடல்கள் எங்கும் விரவிக் காணப்படும் இத்தொடர்கள் பாடல்களின் இனிமைக்கும் வளமைக்கும் துணை நிற்கின்றன. புலவர்களின் மனவளத்தையும் புலமைத் திறத்தையும் இவை எடுத்துக் கூறுகின்றன. இத்தொடர்கள் தமிழ்மொழியின் தனித் தன்மைக்கும் தமிழர் பண்பாட்டின் சிறப்புக்கும் சான்றாக அமைகின்றன.

ஐங்குறுநூற்றின் முதல் பத்துப் பாடல்களான வேட்கைப் பத்து முழுவதும் வியங்கோள் தொடர்கள் மலிந்து காணப்படுகின்றன.

“நெல் பல பொலிக! பொன் பெரிது சிறக்க!
யாணர் ஊரன் வாழ்க!
பால் பல ஊறுக! பகடு பல சிறக்க!
பூக்கஞல் ஊரன் தன்மனை
வாழ்க்கை பொலிக!
அறம் நனி சிறக்க! அல்லது கெடுக! (7)

கிள்ளை வாழிய, பலவே! (281)
அம்ம வாழி! தோழி!
அன்னாய், வாழி!”

இவை யாவும் ஓரிரு சொற்களால் ஆன சிறிய தொடர்களாகும்.

3.5. உணர்வுத் தொடர்

வியப்பு, மகிழ்ச்சி, துயரம், அச்சம், வெறுப்பு சினம், இரக்கம், துன்பம் போன்ற உணர்ச்சிகளை வெளிப்படுத்துவது உணர்ச்சித் தொடர் ஆகும். பொதுவாக அகப்பாடல்களைத் தன்னுணர்ச்சிப் பாடல்கள் என்பர். மேற்குறிப்பிட்ட உணர்வுகளை உள்ளடக்கிய தன்மையுடனேயே அகப்பாடல்கள் அமைந்திருக்கும். ஐங்குறுநூறும் அத்தகையதே. உணர்வுகளைப் பாடல்வரிகளில் சுமந்து நிற்கும் ஐங்குறுநூற்றில் அவ்வுணர்வுகளை வெளிப்படுத்தும் ஒலிக்குறிப்புச் சொற்கள் மிகுதியாகக் காணப்படவில்லை.

மென் பிணித்து அம்ம, பாணனது யாழே! *(411)*
-உவகை
இனிதால் அம்ம, இனியவர்ப் புணர்வே! *(415)*
-உவகை
வாராய் ஆயின், வாழேம், தெய்யோ! *(239)*
-துயரம்
பயந்தன மாதோ, நீ நயந்தோள் கண்ணே! *(264)*
-அச்சம்

புலவர்கள் அகமாந்தர்களின் உணர்வுகளை வெளிப்படுத்த, பொருளமைப்பில் தம் சிந்தையைச் செலுத்தியுள்ளார்களே அன்றி ஒலிக்குறிப்புச் சொற்களைப் பயன்படுத்த முயலவில்லை என்பதை இதனால் அறியலாம்.

3.6. செய்வினைத் தொடர்

இது எழுவாய் செய்த வினையைப் பயனிலையாகக் கூறுவது.

இனிப் பசந்தன்று, என் மாமைக் கவினே *(35)*
வதுவை அயர விரும்புதி நீயே *(61)*
தவாநனி சிவந்தன, மகிழ்ந! நின் கண்ணே! *(80)*

ஐங்குறுநூற்றுப் பாடல்வரிகள் செய்வினைத் தொடர்களைக் கொண்டவை.

3.7. செயப்பாட்டு வினைத் தொடர்

செயப்படுபொருளை எழுவாயாகவும் எழுவாயைக் கருத்தாவாகவும் கொண்டு வினையுடன் பெறு, படு முதலிய ஒட்டுக்களைச் சேர்த்து வருவது செயப்பாட்டு வினைத்தொடர் எனப்படும்.

நீ நயந்து உறையப்பட்டோள் யாவளோ? *(370)*

4. கூட்டுத் தொடர்கள்

ஒன்றுக்கு மேற்பட்ட பெயர்த் தொடர்கள் அல்லது வினைத் தொடர்கள், பிற இலக்கணக் கூறுகள் கூட்டாக இணைந்து வருவன கூட்டுத் தொடர்கள் எனப்படும். ஒரு எழுவாய் பல பயனிலைகளைப் பெற்று வரும்.

குன்றக்குறவன் காதல் மட மகள்
மன்ற வேங்கை மலர் சில கொண்டு,
மலை உறை கடவுள் குலமுதல் வழுத்தி,
தேம் பலிச் செய்த ஈர் நறுங் கையள் *(259)*

அவிர்தொடி கொட்ப, கழுது புகவு அயர,
கருங்கட் காக்கையொடு கழுகு விசும்பு அகவ,
சிறு கண் யானை ஆள் வீழ்த்துத் திரிதரும்
நீள் இடை அருஞ் சுரம் *(314)*

இத்தகைய கூட்டுத் தொடர்கள் பாடல்களின் பொருள் ஆழத்திற்குத் துணை நிற்பனவாய் அமைந்துள்ளமையைக் காணமுடிகிறது.

5. கலவைத் தொடர்கள்

ஒரு முதன்மைத் தொடரினுள் ஒன்றோ பலவோ துணைத் தொடர்கள் அமைந்து வருவது கலவைத் தொடர் ஆகும். இத்தகைய கலவைத் தொடர்கள் ஐங்குறுநூற்றுப் பாடல்களில் ஏராளம். வேட்கைப்பத்து முழுவதும் இக்கலவைத் தொடர்கள் காணப்படுகின்றன.

வாழி ஆதன், வாழி அவினி!
நெல் பல பொலிக! பொன் பெரிது சிறக்க!
என வேட்டோளே, யாயே; யாமே,
நனைய காஞ்சிச் சினைய சிறு மீன்
யாணர் ஊரன் வாழ்க!
பாணனும் வாழ்க! என வேட்டேமே (1)

இது என் பாவைக்கு இனிய நன் பாவை;
இது என் பைங்கிளி எடுத்த பைங்கிளி;
இது என் பூவைக்கு இனிய சொற் பூவை என்று,
அலமரு நோக்கின் நலம்வரு சுடர்நுதல்
காண்டொறும் காண்டொறும் கலங்க,
நீங்கினளோ - என் பூங் கணோளே (375)

இத்தொடர்கள் பல செய்திகளைச் செறிவாக்கும் பொருள் எளிமைக்குத் துணை நிற்கின்றன.

ஐங்குறுநூற்றுப் பாடல்களில் மேற்குறிப்பிட்ட தொடர்கள் தவிர அடுக்குத் தொடர்கள் பலவும் காணப்படுகின்றன. இவ்வடுக்குத் தொடர்கள் அக மாந்தர்கள் தம் கூற்றினை வலியுறுத்தும் பொருட்டாக அமைக்கப்பட்டுள்ளமையைக் காண முடிகிறது.

காண்டொறும் காண்டொறும் கலங்க (375)

வல்லன் வல்லன் பொய்த்தல் (37)

நல்லன் நல்லன் என்ப (204)

நொந்து நொந்து உயவும் உள்ளமொடு (491)

பல தொடர்கள் எதிர்மறைப்பொருள் கொண்டு ஐங்குறுநூற்றின் இலக்கிய நயத்துக்குச் சான்றாக அமைகின்றன.

நல்லன் என்றும் யாமே
அல்லன் என்றும் என் தடமென் தோளே (11)

நல்லன் நல்லன் என்ப
தீயேன்தில்ல (204)

பிரிந்தனன் அல்லனோ, பிரியலென் என்றே (18)

இத்தொடரமைப்புக்கள் சங்ககால இலக்கிய, இலக்கண வளத்தை வெளிப்படுத்துவனவாய் அமைந்துள்ளன.

முடிவுகள்

1. சங்கப் பாடல்களுள் ஐங்குறுநூறு சில சொற்களைக் கொண்டு கருத்துக்களைச் செறிவாகக் கூறும் பாடல்களால் ஆன இலக்கியம்.

2. இதில் பெயர்த் தொடர்கள், வினைத் தொடர்கள், தனித் தொடர்கள், கூட்டுத் தொடர்கள், கலவைத் தொடர்கள் என்னும் தொடர்வகைகள் பரவலாக இடம் பெற்றுள்ளன.

3. இத்தொடரமைப்புகளுள் எதிர்மறைத் தொடர்கள், ஏவல் தொடர்கள், வியங்கோள் தொடர்கள், கூட்டுத் தொடர்கள், கலவைத் தொடர்கள் ஆகியன ஐங்குறுநூற்றில் மிகுதியாகக் காணப்படுகின்றன.

4. தொடரமைப்புகள் ஐங்குறுநூற்றின் கற்பனை வளம், உணர்ச்சி வெளிப்பாடு, மன வளம், புலமைத் திறம், பொருள் திறம் ஆகியவற்றை வெளிப்படுத்தத் துணை நிற்கின்றன.

5. இலக்கிய, இலக்கணச் செழுமை வாய்ந்த இத்தகைய தொடரமைப்புக்கள் தமிழின் செம்மொழித் தன்மைக்குச் சான்றுகள் எனலாம்.

பாரதியாரும் மொழி உணர்வும்

முனைவர் இரா. செல்வக் கணபதி
சென்னை.

பாரதி நூற்றாண்டு

கடந்த இருபதாம் நூற்றாண்டைப் பாரதி நூற்றாண்டு என்று கூறுவது பொருத்தமானதாகும். அண்மையில் ஞானபீட விருது பெற்ற எழுத்தாளர் த. விஜயகாந்தன் இன்னும் ஓர் ஆயிரம் ஆண்டுகளுக்குப் பாரதியுகம் தொடரும் என்றதை நானும் ஏற்கிறேன். தமிழ் இலக்கியத் தடத்தில் 20ஆம் நூற்றாண்டில் பாரதி பெற்ற மாபெரும் வெற்றி பிரமிப்பூட்டுவது. விஞ்ஞானத் தொழில் நுட்பத் தேரில் ஏறி, பல்வேறு புனைகோலம் பூண்டு தமிழ்த்தாய் கம்பீரமாக உலா வந்த போதும், அவளைத்தாங்கிப் பிடிக்கும் அரசிருக்கை பாரதி இட்டதேயாகும். உரைநடை, சிறுகதை புதினம், புதுக்கவிதை எனத் தமிழ் பன்முகப்பட்டுக் கிளைத்துச் செழித்த போதும் பாரதிக்கு அருகில் இன்னொரு இருக்கையிட்டு, அவருக்கு இணையாக அமர வைக்க முடியவில்லை. இந்த மாபெரும் வெற்றியின் அடித்தளங்கள் யாவை?

பாடுபொருள் தந்த வெற்றி

பாரதியின் வெற்றிக்கு முதற்காரணமும் மூல காரணமுமாகத் திகழ்வது அவர் தேர்ந்து கொண்ட பாடுபொருள் மானுடமாக அமைந்ததே ஆகும். ஆழ்வார்கள் நாயன்மார்கள் எழுச்சி பெற்ற ஏழாம் நூற்றாண்டு தொடங்கி, பாரதி பாடத் தொடங்கிய காலம் வரை, தமிழ் இலக்கியங்களின் கருவாக–பாடு பொருளாகக் கடவுளர்கள் முன்னிறுத்தப்பட்டனரே அன்றி மனிதர்கள் முன்னிலைப் படுத்தப்படவில்லை. ஆன்மீக உணர்வும், காப்பிய எழிலும் கற்பனைப் புனைவும் உவமைக் கோலங்களும் கொட்டிக் கிடந்தபோதும், பன்னிரண்டு நூற்றாண்டுக் காலத்தமிழ் இலக்கியங்களிலிருந்து மானுடம் அன்னியப்பட்டே நின்றது. கடவுளுக்கு முன் கை கட்டிச் சேவகம் செய்யும் துரும்பாகவே மனிதன் நிறுத்தப்பட்டிருந்தான். பாரதியின் மாபெரும் வெற்றிக்கு அவர் மனிதனை மீண்டும் காப்பொருளாக்கிக் கொண்டதே முதற் காரணம். சங்க இலக்கியங்களில் மானுடம் கருப்பொருளாக நின்றது. ஆனாலும் அங்கே

மானுடம் என்ற பெயரில் மன்னர்களும் செல்வர்களும், வள்ளல்களுமே முன்னிறுத்தப்பட்டனர். பாரதி வந்த பின்னர்தான் இது என் கவிதை. என்னைப் பற்றியது என மானுடம் வியப்போடு தமிழை ஏறிட்டுப் பார்க்கத் தொடங்கியது.

சமயங்களை அரவணைத்தல்

பாரதியின் இமாலய வெற்றிக்கு இரண்டாவது காரணம் அவர் தமிழ்மொழியை, தமிழ் இலக்கியத்தை, தமிழ்க் கவிதைகளைப் பண்டிதர்கள் கையிலிருந்து தட்டிப் பறித்துப் பாமரர்கள் கையில் வழங்கியதால் தான். பாரதிகாலத்துக்கு முன்வரை, தமிழும் இலக்கியமும், இன்னாருக்காகத்தான் என்று ஒரு கூட்டத்தை மட்டும் முன்னிருத்தியே வழங்கப்பட்டன. இனவழியே பகைத்து, சமயவழியே பேதப்பட்டுக் கிடந்த தமிழ் இனம் சந்தேகக் கண்ணுடன் அவற்றைப் பார்த்து நின்றது. இது நமக்கில்லை என்று சைவர்கள் – நாலாயிர நல்ல தமிழை விட்டனர். வைணவர்கள் – திருமுறைத் தேன்பருக நாட்டமில்லதவராயினர். சமய நூல்கள் யாவும் தமிழில் படைக்கப்பட்டிருந்த போதிலும், இந்தப் பேதா பேதங்கள் படைப்பாளிக்கு முழு அங்கீகாரத்தைத் தமிழ் மண்ணில் பெற்றுத் தருவதில் தடையாக நின்றன. பாரதி இன எல்லைகளைத் தகர்த்தார். சமய வரைபடங்களைக் கிழித்தெறிந்தார். பாரதிதமிழ் பேதமற்ற பாமரர் தமிழாகப் போற்றிக் கொள்ளப்பட்டது.

எளிமையின் வெற்றி

பாரதியின் வெற்றி என்பதெல்லாம் தமிழின் வெற்றிதான். கடந்த நூற்றாண்டை அவர் வென்று தனதாக்கிக் கொண்டு வீறு நடைபோடுவதற்கு மூன்றாவது காரணம் அவர் கவிதைகளில் காணப்பட்ட எளிமை. ஔவையார் சில நீதிநூல் ஆசிரியர் கவிதைகள் தவிர தமிழில் எழுந்த ஒப்பற்ற இலக்கியங்கள் முற்றாகச் சமூக அங்கீகாரம் பெறாமைக்குக் காரணம் அவற்றின் மொழியாக்கக் கடுமை : பாமரனுக்குப் புரியாத சொல்லாட்சிகள்: பிரித்துப் படிக்க முடியாத வகையுளித் தொடர்கள் : நிகழ்காலச் சமூகத்தின் மொழி அறிவைக் கணிக்கத் தவறிய பிழைபாடுகள். பாரதி இந்தத் தவறுகளைச் செய்யவே இல்லை. தம் கவிதைகளில் அவர் சொல் புதிது, பொருள் புதிது என்று குறித்தாரே அதன் நுட்பம் தங்களுக்குப் புலப்படுத்துகிறதா ? அவர் ஒன்றும் தமிழில்

இல்லாத புதுச் சொற்களைப் படைத்துக்கொள்ளவில்லையே! மரபுக்கு மாறாக என்ன புதுப்பொருளை அவர் முன் நிறுத்தினார்? ஒன்றுமில்லை?

பாமரனுக்குக் கவிதை!

தமிழ்நாட்டுச் சராசரிப் பாமரனின் அன்றாடப் பேச்சு வழக்கில் இருந்து அவர் கவிதைக்குச் சொற்களைத் தேர்ந்து கொண்டார். இந்தச் சொல்லுக்கு இதுதான் பொருள் என்று பாமரன் உணரும் அதே பொருளில் அதனை அவர் தம் கவிதைகளில் கையாண்டார். யாப்பு என்று கூறப்படும் கவிதை வடிவம் பற்றிய எல்லைகளை அவர் தகர்க்கத் துணிந்தார். பாரதி கவிதை பாமரனுக்கு அகப்பட்டது.

"ஓடி விளையாடு பாப்பா – நீ
ஓய்ந்திருக்க லாகாது பாப்பா
சாதிகள் இல்லையடி பாப்பா – குலத்
தாழ்ச்சி உயர்ச்சிசொல்லல் பாவம்."

கவிதை புரிகிறதே! யாப்பழகு ஒன்றும் கெட்டுவிடவில்லையே! பெரிய செய்தி எளிய தமிழில் புரியும் சொற்களால் வெளிப்பட்டபோது, பெரும்பான்மைப் பாமரத் தமிழ்ச் சமுதாயத்தை அதனால் சென்ற அடைய முடிந்தது.

சாதியக்கட்டு உடைத்தது

பாரதியார் பிறப்பால் பிராமணர் பார்ப்பன குலத்தில் வந்தவர். அவர் கவிதைகளைப் பார்ப்பனரும் அங்கீகரித்தனர். பார்ப்பனர்– பார்ப்பனரல்லாதார் பேதம் தமிழ்ச் சமுதாயத்தில் கட்டவிழ்த்து விடப்பட்ட காலத்திலும் பாரதியாரைப் பார்ப்பனர் என்று ஒதுக்கி விடாது, பிராமணர் அல்லாதாரும் தமிழ் மண்ணில் ஏற்றிப் போற்றினர். கவிஞன் ஒரு மொழி வழிச் சமுதாயத்தில் உதித்து உலகப் பொதுமை பெற்று உயர்தல் வேண்டும். பாரதி பிறப்புப் பற்றி வந்த சாதியச் சுவடுகள் தன் மீது சிறிதும் பதிந்து விடாது கவனமாகப் பார்த்துக் கொண்டவர். குலத்தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல் பாவம் என்று தன் இனத்தாருக்கு அறிவுரை கூறியவர்கள். வாக்கால் மட்டுமின்றி வாழ்வாலும் சாதியம் கடந்த ஒரு தமிழ் மகனாக ஐயத்திற்கு இடமின்றி உயர்ந்து நின்றவர். ஆரிய – திராவிட வாதம் பெருகிநின்ற 20ஆம் நூற்றாண்டுத் தமிழ்ச் சமூக அமைப்பில்,

பாரதி திராவிட இயக்கத்தாரின் அங்கீகாரத்தையும், போலித்தன்மையற்ற வாழ்வாலும் தம் வாக்காலும் எட்டிப்பிடித்தார். பாரதிக்கப் பின் வந்தவர்களில் கவிஞர் பலர் இறந்து புலமை மிக்கிருந்த போதும் ஒட்டுமொத்த தமிழ்ச் சமுதாயத்தின் அங்கீகாரத்தையும் பெற இயலாது போனதற்கு அவர்கள் தங்களை ஒரு கட்டத்தில் நிறுத்திக் கொண்டு – அக்கூட்டத்தின் பிரதியாக அடையாளப்படுத்தியதே காரணம்.

வேறு இரண்டு காரணங்கள்

பாரதியின் வெற்றிக்கும், அவருக்குக் கிடைத்த பரவலான – ஒட்டுமொத்த தமிழ்ச் சமுதாய அங்கீகாரத்திற்கும் வேறு இரண்டு காரணங்களையும் நான் நினைத்துப்பார்க்கிறேன். அவற்றுள் ஒன்று பாரதி கடவுள் மறுப்பை இம் மண்ணில் விதைக்க முயலாமை. ஆயிரம் தெய்வங்கள் உண்டென்று சொல்லி அலையும் அறிவிலிகாள் என்றும் '*அறிவொன்றேதெய்வம்*' என்றும் செத்தபிறகு மேலோகம் வைகுந்தம் சேர்ந்திடலாம் என்பார் பித்தமனிதர் என்றும் பாடியவர்தாம் பாரதி. பாரதியின் நோக்கம் தமிழ்ச் சமுதாயத்தைப் பேதமின்றி ஒன்றுதிரட்டி விடுதலைப் போருக்கு அவர்களைத் தயார்செய்தலே ஆகும்! இந்த முயற்சியில் ஈடுபட்ட அவருக்கு ஆத்திக–நாத்திக வாதம் புரிந்தால் ஏதேனும் ஒரு குழு அன்னியப்பட்டுப் போய்விடும் என்பது நன்றாகவே புரிந்திருந்தது. புராணங்கள் பலவும் பொய் என்று கருதியவர் அவர். ஏசு முதல் இராமன் வரை எல்லா அவதாரங்களும் ஒருநாள் செத்து ஒழியும் என்றவர் பாரதி. விநாயகர் முதல் முத்து மாரிவரை அவர் போற்றி நின்றதற்குக் கூடக் காரணம், அவ்வத் தெய்வங்களுக்குப் பாராட்டுரைத்து அருள் பெற்று வாழவேண்டுமென்பது அவர் நோக்கம் என்று நான் கருதவில்லை. தெய்வங்களின் பெயரால் பிரிந்து நின்ற தமிழ்ச் சமுதாயத்தைச் சிதற விடாது, உடன் நடந்து ஒன்றுபடுத்தி விடுதலை வேள்வியில் முன்னிறுத்த வேண்டும் என்ற பாரதியின் உயர் நோக்கம் இதுவாகத்தான் இருக்க வேண்டும் என்று எனக்குத் தோன்றுகிறது. முறையான தமிழ்க் கல்வியும், கட்டுக் கோப்பான கவிதா விலாசமும் அளப்பரிய தமிழ் அன்பும் கொண்டிருந்த பாரதியின் சீடர் பாவேந்தர் பரவலாகத் தமிழ் மக்களின் முழு அங்கீகாரத்தைப் பெற இயலாமைக்குத் திராவிடச் சார்பும், கடவுள் மறுப்பும் கூடக் காரணங்களாகலாம் என்றே தோன்றுகிறது.

ஆங்கிலத்தின் இடத்தில் தமிழ்

இரண்டாவதாக ஒன்றைச் சொல்ல வேண்டுமானால் அவர் வெற்றிக்கு ஆங்கிலத்தை அகற்றி அந்த இடத்தில் தமிழை நிலைபெறச் செய்ய வேண்டும் என்ற ஆர்வத்தைக் குறிப்பிடலாம். கி.பி.14ஆம் நூற்றாண்டுக்குப் பிறகு வடமொழி அறிவு பெறாத தமிழ்ப் புலமை இங்கே இழிவாகக் கருதப்பட்டது. தனித்தமிழ் இயக்கங்கள் முதலில் வடமொழியை எதிர்த்தே தொடங்கப்பட்டன. ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் ஆங்கிலக் கல்விக்கு மட்டுமே முதன்மை தரப்பட்டது. தமிழும், தமிழ் கற்றாரும், தமிழ் அறிஞர்களும் ஆங்கிலம் கற்ற தமிழர்களாலேயே இழித்துரைக்கப்பட்டனர். பாரதி ஆங்கிலமும் – வடமொழியும் நன்கு கற்றவர். பிரஞ்சு மொழியும், இந்தியும் அவருக்கு ஓரளவு தெரிந்தவை. இருந்தும் தாய்மொழியாகிய தமிழ் மீது அவர்மேலான அன்பு செலுத்தினார். தமிழைக் காதலித்தார். தமிழர்கள் தமிழ் கற்றுத் தமிழால் உயர்ச்சி பெற விரும்பினார். இனவழிப் பேதங்களை மொழிவழி ஒன்று இணைக்க உளமார விரும்பினார். ஆங்கிலக்கல்வி தமிழையும், தமிழ்ப பெருமிதங்களையும் அழித்து வருவதை உணர்ந்தார். தமிழ்மொழி புதிய கலைச் செல்வங்களைப் பெற்றுத் தலை நிமிர வழி தேடினார். சில நல்ல ஆலோசனைகளையும் தமிழ் மக்கள் முன் வைத்தார்.

தேசமே அவர் முதல் குறிக்கோள்

பாரதியின் உள்ளார்ந்த விருப்பங்களுள் உணர்வுகளுள் முதலிடம் வகுப்பது **'தேச விடுதலைதான்'** மொழி, சமயம், இலக்கியம் என்பன எல்லாம் பாரதியில் உள்ளன. அவை எல்லாம் அவரது முதல் பற்றுக்கு ஆதரவாகவே பாடப்பெற்றன. **'நமக்குத் தொழில் கவிதை'** என்ற பதிவில் **'நாட்டுக்கு உழைப்பதற்கே'** கவிதைத் தொழில் புரிவதாக விநாயகரிடம் பேசுகிறார். **'வாழிய செந்தமிழ்'** என்று தொடங்கி, தமிழ், தமிழர் என்று வரிசைப்படுத்திவிட்டு **'வாழிய பாரதமணித்திருநாடு'** என்றே தம் எண்ணம் நிறைவிக்கிறார் அவர். அவர் இலக்கியப் படைப்பில் ஒன்றாகிய பாஞ்சாலி சபதம் பாரதமாதாவின் விலங்கொடிக்க பாண்டவர்கள் போல் தயங்கிக்கிடந்த பாரத மக்களை ஒரு போராட்டத்திற்கு அறை கூவல் விடுத்ததாகவே அமைந்தது. அவரை முன்னோர் தேசியக்கவி சுப்பிரமணிய பாரதியார் என்றதே சரியான

மதிப்பீடு. தேச விடுதலை அறை கூவல்களின் இடையே நிழலாகும் பாரதியின் தமிழ் உணர்வுப் பதிவுகள் சிலவற்றை இனி இனங்காட்டி நிறைவிப்பேன்.

இலக்கியங்கள் தந்த வாழ்வு

மொழிவழி மாநிலங்கள் – இந்திய தேசத்தின் ஒருங்கிணைப்புக்குள் கட்டுப்பட்டு, கொண்டும் கொடுத்தும் பெருமிதத்தோடு வாழ்தல் வேண்டும் என்பது பாரதியின் விருப்பம். தமிழ் நாட்டின் பெருமை எல்லாம் இங்கே வாழ்ந்திருந்து அருந்தமிழ் நூல்கள் பல ஆக்கித் தந்த கவிஞர்களால் அமைந்தவை என்று அவர் உளமார நம்பினார். '*கம்பன் பிறந்த தமிழ்நாடு*' என்றும்,

> *"வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து*
> *வான்புகழ் கொண்ட தமிழ்நாடு"* என்றும்,
>
> *"நெஞ்சை அள்ளும் சிலப்பதி காரம் என் றோர்மணி*
> *ஆரம் படைத்த தமிழ்நாடு"*

என்று கூறும் பாரதியின் பதிவுகளில் தமிழ்நாட்டின் பெருமைகளுள் பலவற்றிற்கு அமர இலக்கியங்கள் படைத்த பெரும் கவிஞர்களே காரணர்கள் என்பதைப் பாரதி நன்றியோடு இனம் பிரித்துக் காட்டுகிறார்.

புதிய கலைகள் கொணர்க

ஆங்கிலக் கல்வியின் வருகையால் புதிய புதிய துறைகள் பலப்பல முன்னேறி வருவதைக் காணும் பாரதி அவை எல்லாம் தமிழிலும் வரவேண்டும் என்று தம் விருப்பத்தை வெளிப்படுத்துகிறார். ஏறத்தாழ நூறு ஆண்டுகளுக்கு முற்பட்ட பதிவுகள் இவை இன்றும் அவை தமிழ் மண்ணில் மலரவில்லை என்பதே சோகம். புதிய கலைச் செல்வங்களைத் தமிழ் மொழிக்கு உரிய நாளில் கொண்டுவந்து சேர்க்கவில்லை என்றால்,

'மெல்லத் தமிழ் இனிச்சாகும்'

என்று அவர் அஞ்சினார். அந்த எண்ணமே அவருக்கு உகப்பாக இல்லை. நேரடிப் பதிவுக்கு அஞ்சித் தம் கூற்றாகப் பதியாது, 'என்று அந்தப் பேதை உரைத்தான்' என்று பதிவு செய்தார். நாம் பாரதிக்கு விழா எடுத்தோம்.

படம் எடுத்தோம். பட்டி மன்றம் அமைத்தோம். அவர் வேண்டியவாறு எட்டுத் திசையினும் பயணித்தோம். ஆனால் வளர்ந்தமைந்த புத்தம் புதிய கலைகளைத் தமிழுக்குத் தமிழ் மொழியில் கொண்டு வரத் தவறினோம்.

மெல்லத் தமிழ் இனிச்சாகும்

பாரதி அச்சம் உண்மையாகிவிட்டது. பொறியியலை, மருத்துவத்தை, கலைகள் பலவற்றை இன்று தமிழ்நாட்டில் கல்விக் கூடங்களில் தமிழில் கற்பிக்கும் ஆற்றல் அற்றவர்களாகப் போய்விட்டோம். காலம் கடந்துவிட்டது. இனி முயன்று பயனில்லை என, முயன்றோர் பலரும் இங்கே கை சலித்து விட்டனர். '***மெத்த வளரும் மேன்மைக் கலைகள்***' தமிழகத்தில் இருக்கிறது என்பது உண்மை. ஆனால் அவை தாய்த்தமிழில் இல்லை. தமிழ்மொழியில் கற்பிக்கப்படுவதில்லை என்பது தான் அவலம். ஆங்கிலவழிக் கல்வி மோகம் இன்னும் சில பத்தாண்டுகளில் தமிழை சமஸ்கிருதம் பெற்ற இடத்தில் கொண்டுபோய் ஒரங் கட்டி உட்கார வைத்துவிடும். இன்றைய நிலை நீடித்தால், தமிழ் பாடமொழி இடத்தை இழந்து அடுத்த இருபத்தைந்து ஆண்டுகளில் பேச்சு மொழியாக மட்டும் நிலவும். அடுத்த இருபத்து ஐந்து ஆண்டுகளில் பாரதி குறித்த '***மெல்லத் தமிழ் இனிச் சாகும்***' என்ற நிலை வந்தே தீரும்.

விதியை வெற்றிகொண்ட மூவர்

தமிழ்மொழி குறித்த உயர்ந்த எண்ணம் கொண்டிருந்தார் பாரதி.

"யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழி போல்
இனிதாவது எங்கும் காணோம்"

எழுதவும், பேசவும், நினைக்கவும், சுவைக்கவும் உரிய உன்னத மொழி தமிழ் என்று அவர் நம்பினார். தாய்மொழியாகிய தமிழை உலகெங்கும் சென்று பிறமொழியாளர்கள் மத்தியில் விதைத்து மலர்விக்க அவர் விரும்பினார்.

"தேமதுரத் தமிழோசை உலகமெலாம்
பரவும் வகை செய்தல் வேண்டும்"

என்று பாடும் கவிதை வரிகள் நம்மைச் சிந்திக்க வைக்கின்றன. எல்லாக்

கவிஞர்களையும் கற்க இயலாவிடினும் கம்பர், வள்ளுவர், இளங்கோ ஆகியோர் நூல்களையாவது கற்க வேண்டுமென்று அவர் வற்புறுத்தினர். இவர்கள் செய்த மூன்று நூல்கள் வாழும்வரை விதியால் கூடத் தமிழச் சாதியை அழிக்கமுடியாது என்று அவர் கருதியிருந்தார்.

தமிழ் முழக்கம் செய்வீர்!

அறிவுப் பூர்வமான வாழ்வை விடுத்து, உணர்ச்சிப்பூர்வமாக வாழ்ந்திருக்கும் தமிழர்களை அவர் எண்ணி நகையாடத் தவறவில்லை.

"நாமமது தமிழரெனக் கொண்டிங்கு
வாழ்ந்திடுதல் நன்றோ?"

என்று வினாத் தொடுத்து அறிவு கொளுத்தும் பாரதி

"தேமதுரத் தமிழோசை உலகமெலாம்
பரவும் வகை செய்தல் வேண்டும்"

என்று உரிமையோடு தமிழர்களுக்கு ஆணை பிறப்பிக்கிறார். உலகெலாம் சென்று பரப்பும் முயற்சி ஒருபக்கம் நிலவட்டும். இன்னொரு பக்கம் தமிழ்நாட்டுத் தெருக்களில் தமிழை முழங்கச் செய்யுங்கள் என்று வேண்டுகோள் வைக்கிறார்.

"சேமமுற வேண்டு மெனில் தெருவெல்லாம்
தமிழ் முழக்கம் செழிக்கச் செய்வீர்"

ஆனால், கடந்த எண்பது ஆண்டுகளாக நாம் பாரதி காட்டிய வழியில் மொழி வளர்ச்சிக் கென்று, பெரிதாக எதையும் சாதித்து விடவில்லை. நமது செயல் கவிஞருக்கு நாம் செய்யும் அவ மரியாதை மட்டுமன்று: நமக்கு நாமே செய்துகொள்ளும் பெருங்கேடாக நிற்கின்றன.

தமிழ் வளர்ச்சிக்கு ஆலோசனைகள்

ஒரு மொழி வளர்ச்சிக்குக் கவிஞர் சில நல்ல ஆலோசனைகளைத்தான் முன்வைக்க இயலும். சமூகம் அவன் சிந்தனைகளை நடைமுறைப்படுத்தும் பொறுப்புடையது. தமிழ்மொழி வளர்ச்சிக்குக் கவிதையில் பாரதிக்கு முன் எந்த ஒரு தமிழ்க் கவிஞரும் ஆலோசனைகள் வழங்கியதில்லை. பாரதி முதல் முயற்சி மேற்கொள்கிறார்.

1. பிறநாட்டு அறிஞர்களில் உயர்ந்த படைப்புக்கள், தமிழ் மொழியில் மொழி பெயர்க்கப்பட்டு தமிழர்களுக்கு எளிதாக கிடைக்கச் செய்யவேண்டும்.

2. திருக்குறளுக்கும் – சிலப்பதிகாரத்திற்கும் – இராமகாதைக்கும் இணையான – என்றும் அழியாப் புகழுடைய புதுப்புது நூல்களைத் துறைதோறும் தமிழில் தமிழ் அறிஞர்கள் ஆக்கி அளிக்க வேண்டும்.

3. நாமே நமக்குள் தனித்தனியே, குழுக்களாகக் கூடிக் கொண்டு, பழங்கதைகள் காட்டி, பழம்பெருமை பேசி மகிழ்வது மொழி வளர்ச்சிக்கு உதவியாக அமையாது.

4. தமிழ் அறிஞர்களுக்கு இணையான உலக அறிஞர்கள் இது உன்னதமானது என்று போற்றித் தலைதாழ்த்தும் கம்பீரமான படைப்புகள் தமிழிலிருந்து கொண்டுவருதல் வேண்டும்.

மேற்குறித்த பாரதியின் உணர்வுகளில் பத்துசதம் கூட நாம் இன்றுவரை நிறைவேற்றியவர்கள் அல்லர்.

பாரதி கண்ணீர் உகுப்பார்

மகாகவி பாரதியின் தமிழ் மொழி உணர்வுகள் குறித்த முதன்மைப் பதிவுகளை இங்கே தீட்டித்தந்துள்ளேன். அரசியல் காரணங்கள் தேசிய மொழிக் கொள்கை, பயிற்று மொழி குறித்த தெளிவற்ற சிந்தனைகள், வேலை வாய்ப்புக் குறித்த பொய்யான பிரச்சாரங்கள், தங்கள் வாழ்வுக்கும் – வளர்ச்சிக்கும் மொழியைக் கருவியாகப் பயன்படுத்திக் கொண்ட போலி மனிதர்களின் கீழ்மை எல்லாம் ஒன்று திரண்டு பாரதி ஓடவிட்ட தமிழ் மொழித் தேரை முட்டுக்கட்டைகளாக நின்று ஓரிடத்தில் நிற்க வைத்துவிட்டன. இந்த முட்டுக்கட்டைகளை அகற்றும் எந்த – குறிப்பிடத்தக்க முயற்சியும் தமிழ் மக்களால் மேற்கொள்ளப்படவில்லை என்பது பாரதிக்குத் தெரிந்தால் அவர் கண்ணீர் உகுப்பார்! நாம் என்ன செய்யப் போகிறோம் ?

தமிழ் இலக்கண நூல்களில் அறிவியல் சிந்தனைகள்

முனைவர் பெ. சுயம்பு
தமிழ் இணைப்பேராசிரியர்
ஆதித்தனார் கல்லூரி
திருச்செந்தூர்.

தமிழறிஞர்கள் தாய் மொழியின் தனித்தன்மையைப் பேணுவதற்காகவும் அதனை மக்களின் வாழ்க்கைத் தேவைக்கேற்பப் பயனுடையதாக்குதற்காகவும் காலந்தோறும் இலக்கண நூல்கள் பலவற்றை யாத்துள்ளனர். தொல்காப்பியம் முதலாகவுள்ள இவ்விலக்கண நூல்களில் விவரிக்கப்படுகிற கருத்துக்கள், விவரிப்பு முறை முதலியவற்றை நூலாசிரியர்கள் அறிவியலார்ந்த நிலையில் அமைத்துள்ளனர்.

பழையன கழிதலும் புதியன புகுதலும்

மனித வாழ்வை நிலைப்படுத்தி வளப்படுத்துதலே அறிவியலின் அடிப்படை நோக்கமாகும். தொன்று தொட்டு வாழ்வியலில் இடம் பெற்றுள்ளவற்றில் மனிதன் வாழ்கிற காலத்திற்குப் பயனற்றவற்றை நீக்கிவிட்டு, தேவையானவற்றைப் படைத்துக் கொள்வது அறிவியலின் இயக்கத்திற்கு உயிரோட்டமாக உள்ளது.

இதனையே,

"பழையன கழிதலும் புதியன புகுதலும்
வழுவல கால வகையி னானே"

(நன்னூல் : 461)

என்று பவணந்தி முனிவர் நன்னூலில் குறிப்பிடுகிறார். இக்கொள்கை தொல்காப்பியத்தின்,

"கடிசொல் இல்லை காலத்துப் படினே"

(தொல்காப்பியம் 935)

என்னும் கொள்கையின் வளர்ச்சியாகும்.

மக்கள் வாழ்விற்குப் பயன்படாது வழக்கிலிருந்து மறைந்து ஒழிந்த மொழிக்கூறுகளை நீக்குதலும் வாழ்வில் பயன்படுகிற மொழிக்கூறுகளுள் இன்றியமையாதனவற்றை ஏற்று அவற்றுக்குப் புதிய விதிகளை அமைத்தலும் ஒரு மொழியின் நிலைப்பிற்கும் உயிரோட்டத்திற்கும் உகந்தனவாகும். ஆதலால் மரபிலக்கண நூல்கள் மொழியின் தொன்மையான இலக்கண விதிகளைப் பெரிதும் வழிமொழிந்து, புதிய விதிகள் சிலவற்றையும் படைத்து இலக்கணம் கூறுகின்றன. ஒரு மொழியில் இலக்கண நூல்கள் பல அவ்வப்போது தோன்றிப் பெருகுதற்குப் பழையன கழிதலும் புதியன புகுதலும் என்னும் கொள்கையே காரணமாகும்.

தொல்காப்பியம்

தமிழில் இன்று கிடைக்கப்பெற்றுள்ள நூல்களுள் தொன்மையானது தொல்காப்பியம். பிற மொழிக் கூறுகள் கலவாது தமிழ்மொழியின் அமைப்பினையும் இலக்கிய அமைப்பினையும் பேணுதலில் தொல்காப்பியனார் பெரிதும் ஆர்வமுடையவர். எழுத்து, சொல், பொருள் எனும் மூவகை இலக்கணங்களிலும் அறிவியல் சிந்தனைகளைப் படர விட்டுள்ளார். தொல்காப்பிய எழுத்ததிகாரம் ஒன்பது இயல்களாகப் பகுக்கப்பட்டுள்ளது. அவற்றுள் முதலாவது நூன்மரபு, இவ்வியல் எழுத்துக்களின் பெயர், எண்ணிக்கை, ஒலியளவு (மாத்திரை), வரிவடிவம் எனும் இயல்புகளை விவரிக்கிறது. இது தற்கால மொழியியலின் ஒலியனியல் எனும் பிரிவைப் போன்றது. இரண்டாவது மொழிமரபு. இவ்வியல் சொல்லமைப்பில் முதல், இறுதி, இடையில் வரத்தகுந்த எழுத்துகளை இனங்காட்டுகிறது. மொழியியலார் இச்செய்திகளைத் தரும் பிரிவினை, ஒலியன்களின் வருகை என்பர். மூன்றாவதான பிறப்பியல், எழுத்துகள் நாக்கு, அண்ணம், இதழ், குரல்நாண், மூக்கு போன்ற ஒலியுறுப்புகளின் செயற்பாட்டிற்கு ஏற்ப ஒலிக்கப்படுகிற முறையினைக் கூறுகிறது. மொழியியலின் ஒலிப்பு ஒலிப்பியல் (articulatory Phonetics) கொள்கைக்கு இவ்வியலில் தொல்காப்பியனார் நெடுங்காலத்திற்கு முன்னரே முன்னோடியாகியுள்ளார்.

எழுத்ததிகாரத்தின் ஏனைய இயல்கள் ஆறும் புணர்ச்சிக் கருத்துகளை விவரிக்கின்றன. புணர்ச்சியின் பொது இலக்கணத்தைப் புணரியல் அறிமுகப்படுத்துகிறது. உயரீறு, மெய்யீறு, குற்றியலுகரவீறுகளாலான சொற்கள் புணர்ச்சியின் போது எய்துகிற ஒலிமாற்றச் செய்திகளின் தொகுப்பினைப் பொதுநிலையில் தொகைமரபு விவரிக்கிறது. வேற்றுமை உருபுகள் பெயர்ச் சொற்களுடன் புணரும் செய்திகளை உருபியல் விவரிக்கிறது. உருபுகள் பெயர்ச் சொல்லின் அக உறுப்புகளாகக் கருதப்படுதலால், இப்புணர்ச்சி அகப்புணர்ச்சியாகக் கொள்ளப்படுகிறது. உயிர் மயங்கியல், புள்ளி மயங்கியல், குற்றியலுகரப் புணரியல் மூன்றும் முறையே உயிரீற்றுச் சொற்கள், மெய்யீற்றுச் சொற்கள், குற்றியலுகரவீற்றுச் சொற்களுடன் பிற சொற்கள் வந்து புணருதலை விவரிக்கின்றன. இவை சொல்லுடன் சொல் புணருதல் பற்றியவையாதலால் புறப்புணர்ச்சி எனப்படுகின்றன.

புணர்ச்சிக் கருத்துகளை விவரிக்கிற எழுத்திலக்கணத்தினை மொழியியலார் உருபொலியனியல் என்பர். தொல்காப்பியனார் ஒலியனியல், ஒலியன்களின் வருகை, ஒலிப்பியல், உருபொலியனியல் என்னும் வரிசையில் அமைத்துள்ளார். இவை யாவற்றின் தொகுப்பே எழுத்தியல் என மொழியியலில் கூறப்படுகிறது.

மொழியியலார் ஒலிப்பியலை முதலிலும் தொடர்ந்து ஏனைய இயல்களையும் விவரிப்பர். தொல்காப்பியனார் ஒலியனியலை முதலில் அமைத்துள்ளார். எழுத்துகளின் பெயர், பிற இயல்புகளை அறிமுகப்படுத்திய பின்னரே ஏனைய செய்திகளைக் கூற வேண்டும் என்பது அவரது கொள்கை. இக்கொள்கை மொழியியலாரின் அணுகுமுறையை விடவும் அறிவார்ந்து காணப்படுகிறது.

தொல்காப்பியத்தில் எழுத்திலக்கணத்தைப் போன்ற அறிவார்ந்த இயலமைப்பும் அவற்றை வரிசைப்படுத்துதலும் சொல்லிலக்கணத்தை விவரிக்குமிடத்தும் காணப்படுகின்றன. சொல்லதிகாரத்தில் தொடரிலக்கணத்திற்கு முதன்மை தரப்பட்டுள்ளது. கிளவியாக்கம், வேற்றுமையியல், விளிமரபு, வேற்றுமை மயங்கியல், எச்சவியல் எனும் ஐந்து இயல்களும் தொடர் இலக்கணம் பற்றியவை.

கருத்துப் பரிமாற்றம் தொடர் அளவிலேயே முழுமையாகிறது. சொற்களுக்கான பொருண்மையும் தொடர் அளவிலேயே முழுமையாகவும் குறைவின்றிச் சரியாகவும் புலப்படுத்தப்படுகிறது. இதனாலேயே மொழியின் அமைப்புக் கூறுகளுள் தொடருக்குத் தொல்காப்பியனார் முதன்மை தந்து இலக்கணம் கூறுகிறார்.

தொல்காப்பியச் சொல்லதிகார இயற்பகுப்பில் வேற்றுமை இலக்கணம் பற்றியது குறிப்பிடத்தக்கது. விளி தவிர்த்த ஏழு வேற்றுமைகளின் பெயர், உருபு, பொருள் எனும் இயல்புகளைத் தொகுத்து வேற்றுமையியல் விவரிக்கிறது. ஒன்றுக்கு மேற்பட்ட வேற்றுமைகள் உரிமை கொள்ளுதலால், புலப்பாட்டில் மயக்கத்திற்குரிய செய்திகள் வேற்றுமை மயங்கியலில் தொகுத்துக் கூறப்படுகின்றன. விளிவேற்றுமை சொல்லமைப்பளவில் ஒரு தனிப் பெயராகவும் பயன்பாட்டளவில் முற்றுத் தொடராகவும் (இராமா! என்பது இராமா இங்கே வா அல்லது இராமா இங்கே பார் எனப் புதைநிலையில் தொடராகிப் பொருளை உணர்த்துகிறது) இருத்தலால் ஏனைய வேற்றுமையிலிருந்து வேறுபடுகிறது. இதனால் தொல்காப்பியனார் விளிவேற்றுமையைத் தனிமைப்படுத்தித் தனி இயலில் விவரிக்கிறார். ஏனைய வேற்றுமைகள் எச்சத் தொடராக அமைவனவாகும்.

"வேற்றுமை தாமே ஏழென மொழிப
விளிகொள் வதன்கண் விளியோ டெட்டே"
(தொல்காப்பியம் 546)

என்னும் நூற்பாவில் தொல்காப்பதியனார் வேற்றுமை குறித்த தம் கொள்கையினையும் வேறு சிலர் கொள்கையினையும் தெரிவிக்கிறார். எனவே தம் கொள்கையை நிலைப்படுத்தும் நோக்கிலும் விளிக்குத் தனி இயலை அமைத்துள்ளார்.

தொல்காப்பியனார் விவரிக்கிற இலக்கணக் கருத்துகளுள் அறிவியலார்ந்த சிலவற்றை இங்கு எடுத்துக் கூறலாம்.

தமிழ் இலக்கண நூல்கள் பலவற்றில் எழுத்துகளின் பிறப்புச் செய்திகள் அறிவியலை ஒட்டி விவரிக்கப்பட்டுள்ளன. பேச்சொலிகளைப் பிறப்பிக்கிற உறுப்புகளைக் காற்றறைகள்,

ஒலிப்புறுப்புகள் எனப்பகுத்து இந்நூல்கள் கருதுகின்றன எனும் அளவில் விவரிப்புமுறை காணப்படுகிறது. நன்னூல் (737) இலக்கண விளக்கம் (9) முதலிய நூல்களில் மூக்கு காற்றறைகளுடன் சேர்த்துக் கூறப்பட்டுள்ளது.

தொல்காப்பியம் மூக்கினை ஒலிப்புறுப்புகளுடன் சேர்த்துக் கூறுகிறது.

"உந்திமுதலா முந்து வளித் தோன்றித்
தலையினும் மிடற்றினும் நெஞ்சினும் நிலைஇப்
பல்லும் இதழும் நாவும் மூக்கும்
அண்ணமும் உளப்பட எண்முறை நிலையான்
உறுப்புற்று அமைய....."

(தொல்காப்பியம் 83)

ஓர் வலிலினவொலி பிறக்குமிடத்திலேயே அதன் இன மெல்லினமும் பிறக்கிறது. இதனாலேயே இலக்கண நூல்கள் ககார ஙகாரம் முதல்நா அண்ணம் (தொல்காப்பியம் 89), சகார ஞகாரம் இடைநா அண்ணம் (தொல்காப்பியம் 90) என்பன போன்று இரு இன எழுத்துகளையும் இணைத்து விதிகளைக் கூறுகின்றன.

"மெல்லெழுத்து ஆறும் பிறப்பின் ஆக்கம்
சொல்லிய பள்ளியின் நிலையின ஆயினும்
மூக்கின் வளியிசை யாப்புறத்தோன்றும்"

(தொல்காப்பியம் 100)

வல்லெழுத்துகள் மூக்கில் மெல்லெழுத்துகளாக மாற்றப்படுதலைத் தொல்காப்பியனார் மூக்கின் வளியிசை யாப்புறத்தோன்றும் எனக் குறிப்பிடுகிறார்.

மெய்யொலிகளுள் மெல்லினங்கள் மூக்கில் பிறக்கின்றன என்பது நன்னூல் முதலான நூல்களின் கொள்கை. ஆனால் வாயில் பிறக்கின்ற வல்லொலிகள் மூக்கின் வழியாக மூச்சுக்காற்று வெளியேறுங்கால், மெல்லினவொலிகளாக மாற்றப்படுகின்றன என்பதே உண்மையாகும். மூக்கு, வாயில் பிறக்கிற ஒருவகை ஒலிகளை

வேறுவகை ஒலிகளாக மாற்றுதலால், ஓர் ஒலியுறுப்பாகக் கருதப்படுகிறது. (P. Lade Foged, Elements of Accoustic Phonetics, page 105).

தொல்காப்பிய நூற்பாக்களுள் எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே (640) என்பது அறிவியலார்ந்த ஒன்றாகும். சொற்கள் யாவும் வெளிப்படையாக அல்லது அவை வழங்கப்படுகிற சூழலை ஒட்டிக் குறிப்பாகப் பொருளை உணர்த்த வல்லவையே. எனவே பொருளற்ற சொல் என்பது மொழியில் இருத்தல் இயலாது என்பது தொல்காப்பியனாரின் கொள்கை.

பொருளதிகாரத்துச் செய்திகளுள் உலக அமைப்பு, உயிரினங்களின் பாகுபாடு ஆகியன குறிக்கத் தக்கன.

"நிலம்தீ நீர்வளி விசும்போடு ஐந்தும்
கலந்த மயக்கம் உலகம்...." (தொல்காப்பியம் 1586)

உலகிலுள்ள அனைத்துப் பொருள்களும் நிலம், நீர், தீ, வளி, விசும்பு எனும் ஐந்தினால் ஆகியவை என்பது இந்திய மெய்ப்பொருளியலாரின் தொன்மையான கொள்கை. இவை ஐந்தும் தனித்தனியாகக் கலந்தும் ஒன்றோடு ஏனைய நான்கும் பிரித்தற்கு இயலாது கூடியும் இவ்வுலகம் அமைந்து இயங்குகிறது. பிரித்தற்கு இயலாத கூட்டுப்பொருள் நிலையினைப் பஞ்சீகரணம் என்பர். அதாவது காற்றில் (வளியில்) வளி 1/2 + நிலம் 1/4 + நீர் 1/4 + தீ1/4 + விசும்பு1/4 + என ஐம்பூதப் பொருள்களும் உள்ளன. இவற்றைக் கண்ணால் எளிதில் காணுதல் இயலாது என்பதனால், தொல்காப்பியனார் மயக்கம் எனக் கூறுகிறார். மெய்ப்பொருளியலார் ஐந்தாகக் கண்ட தனிமப் பொருள்களை இன்றைய அறிவியலறிஞர்கள் நூற்றுக்கு மேற்பட்டனவாக நுணுகிப் பகுத்து வெளிப்படுத்தியுள்ளனர். தனிமங்களின் (elements) சேர்க்கையாலான உலகப் பொருள்கள் கலவை, கூட்டுப் பொருள் எனக் கூறப்படுகின்றன.

தொல்காப்பியனார் உயிரினங்கள் அனைத்தையும் அவை பெற்றுள்ள அறிவாற்றலை ஒட்டி ஆறு வகையாகப் பகுத்து விவரிக்கிறார்.

"புல்லும் மரனும் ஓரறி வினவே
பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே"

(தொல்காப்பியம் 1527)

தாவரவியலார் பயிரினங்களை அவற்றில் காழ் (வயிரம்) அமைந்துள்ள இடத்தை ஒட்டிப் புல், மரமென இருவகையாக்குவர். இவ்வகைப்பாடு தொல்காப்பியத்திலும் ஏற்கப் பெற்றுள்ளது.

வீரசோழியம்

வீரசோழியம் வடமொழியுடன் ஒப்பிட்டுத் தமிழை விவரிக்கிற இருமொழி இலக்கண நூல். சொல்லிலக்கணத்தைக் கற்பிப்பதில் இந்நூல் எளிய ஆற்றல் வாய்ந்த முறையை மேற்கொள்கிறது. சொற்கள் பகுதி + விகுதி என இரு உறுப்புகளாகப் பகுத்து இதில் விவரிக்கப்படுகின்றன. பகுதி, அகராதிப் பொருளை உணர்த்துகிற அடிச்சொற்கள். விகுதியில் காலஇடைநிலை, பால் விகுதி முதலியன அடக்கம். பார்த்தான் எனும் சொல் பார் + தான் என்றும் உண்டார்கள் என்பது உண் + டார்கள் என்றும் பகுத்துக் கூறப்படுகின்றன. இத்தகைய பகுப்பு முறை ஒரு மொழியை எளிதில் கற்றுக் கொள்ளுதற்கும் கற்பித்தற்கும் ஏற்றதாகும்.

வீரசோழியம் விகுதி எனக் கூறுவனவற்றை நன்னூல், இலக்கணவிளக்கம் முதலிய நூல்கள் இடைநிலை, சாரியை, விகுதி எனப் பகுத்துக் கூறுகின்றன. இடைநிலை, விகுதி, சாரியை என்பன பகுதியின் பின்னே சேர்க்கப்படுதலால் பின்னொட்டுகளாகும். எனவே இவற்றை வீரசோழியம் விகுதி எனக் கருதுவது ஏற்புடையதே.

நன்னூல்

இந்நூல் தமிழ் இலக்கண நூல்களுள் கல்வியியலில் முன்னே நிற்பது. இது சுருங்கச் சொல்லி விளங்க வைத்தல், சிறப்பாகத் தொகுத்து வகைப்படுத்துதல் முதலிய விவரிப்பு நெறிகளால் இச்சிறப்பினைப் பெற்றுள்ளது.

நன்னூலின் விவரிப்பு நெறிகளுள் எழுத்ததிகாரத்திலும் சொல்லதிகாரத்திலுமுள்ள திட்ட நூற்பாக்கள் சிறப்பானவை.

“எண்பெயர் முறைபிறப் புருவ மாத்திரை
முதலீ றிடைநிலை போலி என்றா
பதம்புணர் பெனப்பன் னிருபாற் றதுவே”

(நன்னூல் 56)

“ஒருமொழி தொடர்மொழி பொதுமொழி என்றா
இருதிணை ஐம்பால் பொருளையும் தன்மையும்
மூவகை இடத்தும் வழக்கொடு செய்யுளின்
வெளிப்படை குறிப்பின் விரிப்பது சொல்லே.”

(நன்னூல் 258)

திட்ட நூற்பாக்கள் இரண்டும் முதலில் அமைக்கப்பட்டு, அதில் இடம்பெற்றுள்ள கூறுகளின் வரிசையில் இலக்கணம் விவரிக்கப்படுகிறது. இம்முறை கற்பவருக்கு எளிதில் மனத்தில் இருத்திக் கொள்ளுதற்கு ஏற்றது.

நன்னூல் விவரிக்கும் கருத்துகளுள் எழுத்து, சொல் ஆகியவற்றின் வரைவிலக்கணங்கள் அறிவியல் சார்ந்தவை.

“மொழிமுதற் காரண மாமணுத் திரளொலி
எழுத்தது முதல்சார் பெனஇரு வகைத்தே”

(நன்னூல் 57)

சொல்லின் அமைப்புக் கருவியான ஒலியணுக்களின் திரள் எழுத்து எனப்படும். நன்னூலின் இவ்விளக்கம் மொழியியலாரின் ஒலியனுக்கான விளக்கத்தை ஒத்துள்ளது.

“எழுத்தே தனித்தும் தொடர்ந்தும் பொருள்தரின்
பதமாம் ..... (நன்னூல் 127)

ஓர் எழுத்து தனித்தோ பல எழுத்துகள் சேர்ந்தோ அமைந்து பொருளைத் தருமாயின், அது பதம் ஆகும் என்பது, நன்னூல் சொல்லுக்குத் தருகிற விளக்கம். ஓர் ஒலியன் தனித்தோ பல ஒலியன்கள்

சேர்ந்தோ அமைந்து பொருளைத் தருவது உருபன் எனப்படும். இது மொழியியலின் விளக்கம்.

தொன்னூல் விளக்கம் முதலியன

வீரமாமுனிவர் எழுதிய இலக்கண நூல்களுள் தொன்னூல் விளக்கம், செந்தமிழ் இலக்கணம், கிலாவிஸ் மூன்றும் இலக்கியத்திற்கான எழுத்துத் தமிழின் அமைப்பினை விவரிக்கின்றன. கொடுந்தமிழ் இலக்கணம் பேச்சுத்தமிழை விவரிக்கிறது. இந்நூல்களில் அறிவியல் சிந்தனைகள் பல இடம் பெற்றுள்ளன.

தொன்னூல் விளக்கம் எழுத்திலக்கணத்தை எழுத்துகளின் பிறப்பு, வகை, புணர்ச்சி என மூன்றாகப் பகுத்து விவரிக்கிறது.

" தோற்றமும் வகுப்பும் தோன்றும் விகாரமும்

சாற்றுளித் தோன்றும் தானெழுத் தியல்பே"

(தொன்னூல் விளக்கம் 2)

பிறப்பு, வகை, புணர்ச்சி என்னும் பகுப்பு ஒலிப்பியல், ஒலியனியல், உருபொலியனியல் என்னும் மொழியியலாரின் முப்பகுப்பினைத் தழுவியது. தவிர, முனிவர் மேலை நாட்டவராதலின், அறிவியலின் தாக்கத்தினால் பிறப்பு எனும் பிரிவினை முதலில் கூறுகிறார்.

தொன்னூல் விளக்கத்தின் மற்றுமொரு சிறப்பு இந்நூல் சாரியைகளைச் சொல்லதிகாரத்தில் விளக்குவதாகும். சாரியைகள் இடைச்சொற்களின் வகையாதலால், இவ்வைப்புமுறை ஏற்புடையதே. தொல்காப்பியனார் உள்ளிட்ட தமிழகத்து அறிஞர்கள் சாரியைகளை வெற்று வடிவங்களாகவும் ஒலியியைபினை உருவாக்கும் ஓசைகளாகவும் கொண்டு, எழுத்ததிகாரத்தில் விவரிக்கின்றனர்.

கொடுந்தமிழ் இலக்கணத்தில் காணப்படுகிற அறிவியல் கருத்துகளுள் மாற்றொலிகள் குறிப்பிடத்தக்கன.

பேச்சுத்தமிழில் க,ச,த,ப,ற,ட எனும் வல்லெழுத்துகள் பல மாற்றொலிகளுடன் வழங்குதலைக் கொடுந்தமிழ் இலக்கணம் குறிப்பிடுகிறது. (பக்கம்.11–33).

எ–டு. க என்பது சொல்லின் முதலிலும் இடையில் இரட்டிக்குமிடத்தும்K எனவும் இடையில் தனித்து வருமிடத்து g எனவும் ஒலிக்கிறது.

காகம் cagam a crow

காக்கை cakei

ச என்பது சொல் முதலிலும் இடையில் தனித்தும் வருமிடத்துs எனவும் இடையில் இரட்டிக்குமிடத்து Cha எனவும் ஒலிக்கிறது.

சுசி Susi Soft

அச்சம் acham fear

கொடுந்தமிழ் இலக்கணத்தில் இவை போன்றபல அறிவியல் சிந்தனைகளைக் காணமுடிகிறது.

இலக்கணக் கலைச் சொற்கள்

தமிழ் இலக்கண அறிஞர்கள் இலக்கணக் கூறுகளின் விளக்கத்தினைப் புலப்படுத்தும் வகையில் ஓரிரு சொற்களில் சுருக்கமாகக் கலைச்சொற்களைக் கண்டறிந்து பயன்படுத்தலாயினர். முதலெழுத்து, சார்பெழுத்து, உயிர்மெய், ஆய்தம், அளபெடை, குற்றியலிகரம், குற்றியலுகரம், நிலைமொழி, வருமொழி, உடம்படுமெய், சாரியை, பெயர், வினை, ஆகுபெயர் என இலக்கணக் கலைச்சொற்கள் யாவும் பொருட் செறிவும் புலப்பாட்டு ஆற்றலும் மிக்கவையாகும்.

எ–கா. உயிர் – உயிர்ப்புடையது; மெய்– உடல் போன்றது; உயிருடனிணைந்து இயங்குவது.

ஆய்தம் – நுணுக்கம், அளபெடை (அளபு+எடை) – மாத்திரை நீட்சி

உடம்படுமெய் – உடன்படுத்தும் மெய். பெயர் – பெயர்த்துக் (வேறுபடுத்திக்) காட்டுவது.

தமிழ் இலக்கணக் கலைச்சொற்கள் யாவும் இவ்வாறு இலக்கணத்தை எளிதில் புரிந்துகொள்ளச் செய்வன. தமிழ் இலக்கண நூல்கள் சிலவற்றில் இடம்பெற்றுள்ள அறிவியற் சிந்தனைகளுள் சில மட்டும் இங்கு நினைவூட்டப்பெற்றுள்ளன.

இணையிலாத் துணைவன் நூலே!

கவிவேந்தர் கா. வேழவேந்தன்

கறுப்பினத்தின் விடுதலைக்கே புரட்சி செய்தார்
கண்ணியராம் மண்டேலா; வெள்ளை யாட்சி
சிறைப்பிடித்தார்; வதைசெய்தார்; தொலைதூ ரத்துத்
தீவினிலே கொண்டு சென்று அடைத்தார்! சின்ன
அறைக்குள்ளே தனிமையிலே அந்தச் சிங்கம்
அயராமல் ஆண்டுபல கழித்த தன்றோ?
கறையான்கள் நெருப்பினையே அரிப்ப தேது?
கடைசியிலே வெள்ளையரும் பணிந்து வந்தார்!

இருட்சிறையில் தனிமையிலே கிடந்த ஏந்தல்
இருபத்தே ழாண்டுகட்குப் பின்னர் மீண்டே
திருமுகத்தைக் காட்டியதைக் கண்ட மக்கள்
சிந்தையெலாம் பூரிக்க விழாவெடுத்தார்!
அரிமாவை ஆவலுடன் பேட்டி காண
அறிவார்ந்த இதழாளர் குவிந்தார்; கேட்டார்:
'ஒரு கேள்வி, இருபத்தே ழாண்டாய் நீங்கள்
ஒற்றையிலே எப்படித்தான் தனித்தி ருந்தீர்?'

"யார் சொன்னார் தனியாளாய் இருந்தேன் என்றே?
எனக்குமொரு துணைவனுண்டே; காந்தி யாரின்
சீர் 'சத்ய சோதனை' நூல் அதுதான்; நானும்
தினம்படித்தேன்; மனவலிமை பெற்றேன்! என்றே
நேரில்லா மண்டேலா சொன்னார் என்றால்
நிகரில்லாப் புத்தகம்போல் துணைவே றுண்டா?
நீர்வேண்டும் மீன்வாழ; அதுபோல் நாமும்
நிறைவாழ்வு பெறவேண்டின் நூல்கள் வேண்டும்!

தொடர்பு முகவரி :
ஆசிரியர், செந்தமிழ்,
மதுரைத் தமிழ்ச்சங்கம்,
மதுரை–625001.
தொலைபேசி : 0452-6575615

RNI Regd. No.: 5508/56 April 2008

ஆசிரியர் குழு

முனைவர் திரு. சுப. அண்ணாமலை
முனைவர் திரு. தமிழண்ணல்
பெரும்புலவர் திரு. இரா. இளங்குமரன்
டாக்டர் திரு. ந. சேதுராமன்
முனைவர் திரு. ம.ரா.போ. குருசாமி
முனைவர் திரு. அ.அ.மணவாளன்
முனைவர் கதிர் மகாதேவன்
முனைவர் பெ. சுயம்பு
முனைவர் திரு. அ. தட்சிணாமூர்த்தி
இராசா திரு. முருகதாஸ் தீர்த்தபதி
முனைவர் திரு. செ. கந்தசாமி
முனைவர் திரு. க. சின்னப்பா

அனுப்புநர்,
செயலாளர்,
மதுரைத் தமிழ்ச்சங்கம்,
மதுரை- 625001.

From,
Secretary,
Madurai Tamilsangam,
Madurai - 625001.
TAMILNADU, S. INDIA

பெறுநர் / To,